04.10.2024 OS.No.71/2012 PW2 Name :.**விஜயசீனிவாசன்**

3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் சென்ற முறை நீதிமன்றத்தில் கொண்டு வருவதாக கூறி சென்ற ஆவணங்களில் ஒன்று மட்டும் கொண்டு வந்துள்ளேன். என்னுடைய பெயரில் உள்ள சொத்து தொடர்பான ஆவணம் அடமானம் வைத்துள்ளாதல் அதை தற்போது என்னால் கொண்டுவர முடியவில்லை. ஆலங்காயத்தில் உள்ள பொன்னம்பலம் மகன் சிவகுமார் என்பவரிடம் நான் அந்த ஆவணத்தை அடமானம் வைத்துள்ளேன். அது பதிவு செய்யபட்டது தான். அது வில்லங்கத்தில் வராது.
2. கைமாறு கடனாக கொடுத்துள்ளதால் அந்த அடமானம் பதிவு செய்யபடவில்லை. வில்லங்க சான்றிதழையும் நான் கொண்டு வரவில்லை. நான் தற்போது கொண்டு வந்துள்ள ஆவணத்தில் வில்லங்கம் தொடர்பான குறிப்புகள் இல்லை. அது வில்லங்க சான்று கிடையாது. என்னுடைய பெயரில் என்னுடைய பெற்றோர்கள் இருவரும் சேர்ந்து 23.04.2021ல் தேதியில் ஆவண எண். 3614/2021ல் எழுதியுள்ள செட்டில்மெண்ட் ஆவண குறிப்புகள் நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் உள்ளது. தாவா சொத்து தொடர்பான சர்வே எண். 170/பி1 ஆகும்.
3. நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் அந்த சர்வே எண் 8 வது அயிட்டமாக காட்டபட்டுள்ளது. என்னுடைய பெயருக்கு ஏற்பட்ட ஆவணத்திற்கு முன்னரே இந்த வழக்கு நடந்து வருகிறது. 1ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தின் சுவாதீனம் கேட்டுதான் வழக்கு போடபட்டுள்ளது. செட்டில்மெண்ட் எழுதிய தேதியில் என் பெற்றோரிடமும் என்னிடமும் சொத்தின் சுவாதீனம் இல்லை.

வழக்கிலும் முதன்மை சாட்சியத்திலும் என் பெயரில் உள்ள தாவா சொத்து குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் பற்றிய விவரத்தை கூறவில்லை.

4. என் உடன்பிறந்த 2 சகோதரர் பற்றி செட்டில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதால் அதை ஆஜர்படுத்த மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர் மருத்துவர் முரளி என்பவர் மனநோயளியாக சிகிச்சையில் உள்ளார் என்றும் அவருக்குண்டான மாதந்திர பராமரிப்பு செலவுகளை நான் கொடுக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துள்ள என்னுடைய சகோதரர் ரவி என்பவரின் மனைவி வேறு ஒரு திருமணம் செய்துள்ளதால் அதை மறைக்கிறேன் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை.

5. 1ம் பிரதிவாதியின் மனைவி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை நான் சரிபார்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்த தேதியில் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இல்லை என்றும் சொத்தின் உண்மையான சுவாதீனம் வைத்திருந்த நபர்களான 1ம் பிரதிவாதியின் மனைவியை வழக்கில் கட்சி சேர்க்காததால் வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மனைவி திலகவதி பெயரில் சொத்து தொடர்பான ஆவணங்கள் உள்ளது என்ற குறிப்பு வில்லங்க சான்றிதழில் உள்ளதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்து குறித்து உயில் ஆவணம் ஏற்பட்டதாக கூறும் விவரம் எனக்கு தெரியும். அது 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்து குறித்து 2ம் பிரதிவாதிக்கும் சொத்தை எங்களுக்கு விற்பனை செய்த நபர்களுக்கும் இடையில் பல்வேறு வழக்கு

நடந்துள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு வழக்கு பிரச்சனை குறித்து பஞ்சாயத்து முச்சிலிக்கா ஏற்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். அது சட்டபடி செல்லாது என நீதிமன்றத்தில் உத்தரவாகியுள்ளது பற்றி எனக்கு தெரியாது.

7. என்னுடைய அம்மா பெயருக்கு சொத்தை கிரையம் கொடுத்த நபர்களுக்கு சொத்தில் உரிமை இல்லை என 2ம் பிரதிவாதி பதிலில் கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியும். திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 8/1986 என்ற வழக்கு நடந்துள்ளது உண்மை தான். பின்னர் அந்த வழக்கு வேலூர் சார்பு நீதிமன்றத்திற்கு அ.வ.எண். 291/1989 என மாற்றம் செய்யபட்டு நடந்த விவரம் எனக்கு தெரியும். அது தள்ளுபடியாகிவிட்டது எப்போது என்று நியாபகம் இல்லை.

8. அது தொடர்பான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யபட்டுள்ளதா என்று தெரியவில்லை. தாவா சொத்து குறித்து 01.12.1984 ல் 2ம் பிரதிவாதியால் 1ம் பிரதிவாதி குடும்பத்தாருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் குறித்து சரிபார்த்தேன். அது தொடர்பாக சொத்தின் சுவாதீனம் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கபட்டதை சரிபார்த்தேன். 1985 ல் தாவா சொத்தின் சுவாதீனம் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தாரிடம் சென்றுள்ளது. அதை மீட்பதற்காக 2012 ல் தான் வழக்கு போட்டேன். வழக்கிற்கு முன் 1 பிரதிவாதி வகையராவிற்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன்.

9. திருப்பத்துர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 1157/1986 என தாக்கலான வழக்கு பற்றி எனக்கு தெரியவில்லை. வழக்கு நிலுவையில் இருக்கும்போது எங்கள் பெயரில் பத்திரம் ஏற்பட்டுள்ளதால் வழக்கு பற்றி விவரம் தெரியாது என பொய்யாக

கூறுகிறேன் என்றால் சரியல்ல. சொத்து ஆவணங்களில் பழைய ஓட்டுவில்லை வீடு உள்ளதாக கூறபட்டுள்ளது தவறாகும். என்னுடைய அம்மா பெயரில் உள்ள ஆவணத்தில் மெட்ராஸ் தார்ஸ் வீடு உள்ளதாக எழுதபட்டுள்ளது. தற்போது வரை வீட்டு வரி விதிப்பு என் அம்மா பெயரில் தான் வருகிறது. சொத்து வரி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை. தாவா சொத்திற்கான மின் இணைப்பு ராஜம்மாள் பெயரில் உள்ளது.

10. தாவா சொத்தில் நான் அனுபவித்ததாக கூறுகின்ற காலத்திற்கான மின் கட்டண ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஒப்பந்தம் 1ம் பிரதிவாதி மனைவி பெயரில் உள்ள ஆவணம் ஆகியவற்றை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை. 1ம் பிரதிவாதி மனைவி பெயரில் உள்ள தானபத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ள நிலையில் அதை தெரிந்து கொண்டு நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தின் தற்போதைய உரிமையாளர் திலகவதியை தரப்பினராக சேர்க்காதது வழக்கு செல்லாது என்றால் சரியல்ல.

11. வழக்கின் தீர்ப்பு திலகவதியை கட்டுபடுத்தாது என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது சொத்தின் சுவாதீனத்தில் யாரும் இல்லை வீடு பூட்டபட்டுள்ளது. வீட்டிற்கான மின் இணைப்பும் தற்போதும் நடைமுறையில் உள்ளது என்பதை சரிபார்த்தேன். யார் மின் இணைப்பை பயன்படுத்துகிறார்கள் என்று எனக்கு தெரியாது. முந்தைய வழக்குகளின் விவரங்கள் 1, 2 மட்டும் தெரியும் மற்றவை தெரியாது. வாசாஆ11 ஆவணம் 1ம் பிரதிவாதி பெயரில் 2ம் பிரதிவாதியால் ஏற்படுத்தியுள்ளது ஆகும். அதை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியவில்லை.

12. அதில் தாவா சொத்தின் சுவாதீனம் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கபட்டுள்ளதாக எழுதபட்டுள்ளது. 1984லிருந்து 1ம் பிரதிவாதியும் அதன்பின் அவருடைய மனைவியும் சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் குறித்து 1, 2 பிரதிவாதிகளுக்கும் இடையில் மாறுபட்ட கருத்து இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் பதில் பற்றி எனக்கு தெரியாது. முந்தைய வழக்குகளில் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்று 1,2 பிரதிவாதிகள் நிலைபாட்டை எடுத்துள்ளார்கள்.

13. 1995ல் தாவா சொத்திற்கான நத்தம் நிலவரிபட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு வழங்கபட்டது பற்றி எனக்கு தெரியாது. திலகவதி பெயருக்கு ஆவணம் ஏற்பட்டது தெரிந்து மாறுபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது பற்றி தெரியாது. தற்போதும் வீடு மதராஸ் தார்ஸ்காக தான் உள்ளது. என் வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு நாங்கள் இருந்தவரை இல்லை. திலகவதியை தரப்பினராக சேர்க்காமல் காலம் கடந்து போட்டுள்ள வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. உரிய தரப்பினரை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடியாக வேணடும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/10/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

B RAJA

Digitally signed by B RAJA
Date: 2024.10.04 16:03:29 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.